# ஈரோட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## வார்தா திட்டக் கண்டனம்

## பி. வி. அனுமந்தராவ் கர்ஜனை

## ஈ. வெ. ரா. விளக்கம்.

(நமது நிருபர்)

ஈரோடு, மே. 21

ஈரோடு தாழ்ப்பட்டவர்கள் நலவுரிமைச் சங்கத்தினாதரவில் நேற்று (20-5-38 மாலை 6 30 மணிக்கு, ஈரோடு மகாஜனஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் ஈரோடு பிரபல அட்வகேட் தோழர் ஈ. எம். அண்ணாமலை பி. ஏ பி எல். அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு வாலிபர்களும் வியாபாரிகளும், முஸ்லிம்களுமாக சுமார் 400 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

ஒரு ஆதிதிராவிடத் தோழரால் கீதம் பாடப்பட்டது.

பின் தலைவர் தோழர் அண்ணாமலை அவர்கள் முகவுரையாகக் கூட்டம் கூட்டப்பட்டதைப்பற்றிப் பேசிவிட்டு, பிரபல தேசபக்தரும், பலமுறை சிறை சென்றவருமான தோழர் பி. வி. அனுமந்தராவ் அவர்களை "ஹிந்தியும், வார்தாக்கல்விதிட்டமும்" என்பதுபற்றி பேசும்படிகூறினார்

அதன்படியே நீண்ட கரகோஷங்களுக்கிடையில் தோழர் அனுமந்தராவ் அவர்கள் ஹிந்தியினால் தமிழுக்கு வரும் ஆபத்து, ஹிந்தி வந்தால் மாணவர்களுக்கு நேரும்கஷ்டம், ஹிந்தியை ஒழிக்க உண்ணாவிரதமிருப்பதை மந்திரியார் பரிகசிக்கும் சூழ்ச்சி ஹிந்திவருவதை தமிழ்நாட்டிலுள்ள ஒரு தேசிய பத்திரிகையும், ஒரு வக்கீலும் கண்டிக்காத காரணம் இவைகளைப்பற்றி மிகவும் உணர்ச்சியுடனும், விளக்கமாகவும் பேசி "ஹிந்தி ஒழிய வேண்டும், நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம்" என்பதைக் காட்ட கூட்டத்திலுள்ள அனைவர்களையும் கரகோஷம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். கூட்டத்திலுள்ள அனைவரும் பெருத்த கரகோஷம் செய்தனர்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து முதலில் பேசிய தோழர் அனுமந்தராவ் அவர்களைப்பற்றிப் பேசிவிட்டு, முதல் மந்திரியார் ஹிந்தியைக் கட்டாய படுத்துவதின் நோக்கம், ஹிந்தி வந்தால் தமிழர்கள் அடையக் கூடிய தீமைகள், ஹிந்தி வந்தால் செலவாகும் தொகை, வார்தா கல்வித் திட்டத்தால் ஏற்படும் தீமைகள் ஆகியவைகளை விளக்கிவிட்டு ஹிந்தி, வார்தா திட்டம் வந்தால் பார்ப்பனரல்லாதார் என்றென்றும் அடிமைப் பட வேண்டுமென்று மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் பல உதாரணங்களுடன் பேசினார். பின் ஒரு நண்பரால் கேட்கப்பட்ட சந்தேகளுக்குப் பதில் கூறினார். பின் தலைவர் தமது முடிவுரையில் ஹிந்தி, வார்தாக் கல்வித் திட்டம் முதலியவைகளைக் கண்டித்துப் பேசியபின் தோழர் எ. ஷண்முகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இரவு 9 மணிக்குக் கலைந்தது.

---

பர்களே, நம்மிலும் சிலர் இத் திட்டத்தை விரும்புவதாகக் காண்கின்றேன். அப்படியானால் நம் குலத்திற்கு மனுநீதிப் பிரகாரம் வருணாச்சிரம தர்மப் பிரகாரம் ஏற்பட்ட தொழில் என்ன? எந்தத்தொழிலைச்செய்யப்போகின்றீர்கள். கூர்ந்து கவனியுங்கள். விழிப்பாயிருந்து அடியுடன் இத்திட்டத்தை ஒழிக்க முற்படுங்கள்.

### அரசியல்.

நம் மகாநாடு குல முன்னேற்றம் ஒன்றையே நோக்கமாக வுடையது. அரசியல் நோக்கம் இல்லை எனக் கருதிக்கொண்டிருக்கிறோம். அரசியலால் நேரும் இடையூறுகளை ஒழிக்க நம் மகாநாடும் சங்கமும் வேலை செய்து தான் தீர வேண்டும். நம்மவர்க்கு முன்னர் நியமனத்தின் மூலமாக அரசியலில் ஸ்தானம் கிடைத்தது. இப் புதிய அரசியலில் அவ்விதம் பெற இடமில்லை. ஆதலால் நாம் தேர்தெடுப்பின் மூலமாகவே நம்மவர்க்கு உரிய பங்குகளைப் பெற வேண்டும். அவசியமான எல்லா ஸ்தாபனங்களிலும் நம் வகுப்பினர் பிரதிநிதிகளாக இருந்து நம்மவர் நலத்தைக் காக்க வேண்டும்.

### சட்டசபைப் பிரதிநிதிகள்.

பாண்டிய நாட்டைத் தவிர்த்து வேறு ஜில்லாக்களில் சிதறுண்டு கிடக்கும் நம்மவர் மதுரை ஜில்லாவில் குறிப்பிட்ட சில தாலூகாக்களில் குடியேறி நிலைத்து கட்டுப்பாடுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் சில பிரதிநிதிகளாவது அரசியலில் அங்கம் பெறலாம். இப்பொழுது ராமனாதபுரம், திருநெல்வேலி இரு ஜில்லாக்களில் நம்மவர் இருவர் காங்கரஸ் கட்சியின் பலத்தால் அங்கம் பெற்றவர்களே யல்லாமல், நம்மவர்களின் தனிப்பட்ட வலிமையால் பதவி பெற்றவர்களாக நான் கருதவில்லை. ஆதலால் தோழர்களே நம்மவர்களின் முற்போக்கையே பெரு நோக்கமாக நீங்கள் பலரும் கொண்டிருப்பது உண்மையானால், நம்மவர்களில் குறைந்தது ஏழு பிரதிநிதிகளாவது சட்டசபையில் இனிமேல் அங்கம் வகிக்க வழிகாண வேண்டும். இதற்கு நான் சொன்ன மார்க்கமே ஏற்றதாகும். ஆதலால், பலர் பலவாறாகச் சிதறுண்டு கிடப்பதிலும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து வலிமையுடன் வாழவேண்டும். உதாரணமாக கோவை ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் தவிர வேறு எங்கும் இல்லாமல் கொங்கு வேளாள மரபினர் திரண்ட கூட்டமாக வாழ்ந்து ஐக்கியமாக இருப்பதால் ஏறக்குறைய 10 பேர்கள் சட்டசபையில் பிரதிநிதிகளாக் வர இடம் ஏற்பட்டது. ஆதலால் நீங்கள் நன்கு உணர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இது வரையிலும் நமக்குப் பிரதிநிதிகளாக இருந்தும் நம் நலனைப் பல வழிகளிலும் காத்து இவ்வுயர்ந்த நிலையை அடையச் செய்த நம் குலத் தலைவர்களுக்கு என்றும் மறவா நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முடிவுரையில் சுருக்கமாக சில வேண்டுகோளைத் தெரிவித்து என் தலைமை உரையை முடித்து விடுகிறேன். நம்மவர் செல்வம் நம்மவர்க்கே பயன்படும்படி உழைப்பும் பிழைப்பும் பெருக வேண்டும். நம்மவர் வாழ வேண்டிய எல்லாத் தொழில் தொழில்களும் நம்மவரால் நடக்க வேண்டும். நம் பெரியார்களின் திருநாட்களைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். நம்மவர் கோவில் நிலயங்களுக்கும் நம் பெரியார்களின் பெயரையே வைக்க வேண்டும்.

இதுவரை என் சொற்பொழிவை அமைதியுடனும் விருப்புடனும் கேட்டுச் சிறப்பித்ததற்கு என்றும் மறவா நன்றியறிதலுடையேன்.